[1978 மார்ச் 2]

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*658 வினு.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு உணவு—கூட்டுற வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த ஐந்து வருடங்களாக எந்தவித வரவு-செலவும் வைத்துக் கொள்ளாத மீனவர் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: (அ) இருபத்தைந்

(ஆ) நீர் நிலைகளில் தண்ணீர் இல்லாமல் இருந்த காரணத் தினுலும், போதிய நிதி வசதிகள் இல்லாமையினுலும், பெரும் பான்மை சங்கங்களின் உறுப்பினர்கள் பிழைப்பை நாடி வெளியூர் களுக்குச் சென்றுவிட்டனர்.

சென்னையிலுள்ள பள்ளிகளின் நேரம்.

* 659 வினு—. திரு. மு. அரங்கநாதன்:
திரு. சோ. அழகர்சாமி:
திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
திரு. து. புருஷோத்தமன்:
திரு. துரை முத்துசாமி:

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா —:

சென்னை மாநகரத்தில் உள்ள பள்ளிகளின் துவக்க நேரத்தை மாற்றி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது பள்ளி துவக்க நேரங்கள் மிக அதிகாலையிலே இருப்ப தாகவும், அப்பொழுது குழந்தைகள் போவதற்குச் சிரமப்படுவ தாகவும் சொல்லப்படுகிறது, அது உண்மையா? இப்பொழுது காலையிலும், மாலையிலும் இரு ஷிப்டுகள் நடத்தப்படுகின்றதா? காலையிலே எத்தனை மணிக்கு பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன? அதேபோல், மாலையிலே எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்படு கின்றன? இதுபற்றி, பெற்றோர்கள் சார்பிலே, பள்ளிகள்சார்பிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக் கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென் சென்னை பள்ளிகள் காலை 8—30 மணி, வட சென்னை பள்ளிகள் காலை 9 00 மணி, சென்னை கல்லூரிகள் காலை 9—00 மணி என்று மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு பள்ளிகள்

1978 மார்ச் 22]

துவங்கும் நேரத்தை மாற்றியமைத்ததை எதிர்த்துப் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடுகள் வந்தன. அம்முறையீடுகளை பரிசீலனை செய்து, பள்ளிக் கல்வி இயக்குனர் பள்ளிகள் துவங்கும் வேலை நேரத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என்கிற கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். தென் சென்னை பள்ளிகள் காலை 9—30 மணி, வட சென்னை பள்ளிகள் காலை 10—00 மணி. பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் சென்னை நகர பஸ்களில் நெரிசல் இன்றி சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்கு போக்குவரத்துத் துறையினர்தான் வசதி செய்து கொடுக்கமுடியும். அந்தத் துறையினரோடு தொடர்பு கொண்டு பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரத்தை மாற்றுவது பற்றிய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், $9\frac{1}{2}$ மணிக்கு தென் சென்னை பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்று. அந்தக் கருத்தை உடனடியாக நிறைவேற்ற என்ன தடை இருக்கிறது? போக்குவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஹைஸ்கூல்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. லோயர் ஸ்கூல், ஹையர் எலிமென்டரி ஸ்கூல், எலிமென்டரி ஸ்கூல் போன்றவைகளை அடுத்த ஆண்டு பள்ளிகள் ஆரம்பிப்பதிலே இருந்து இந்த உத்தரவை இட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குள் முடிவெடுக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.

*660 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும் யோசனை பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களில் தனியார் பள்ளிகளை வைத்துக் கொண்டு சரியாக நிர்வாகம் செய்யாமல் பல்வேறு ஊழல்கள் நடக்கின்றன. அந்த ஊழலைக்களைவதற்கு தேசிய மயம் ஆக்குதல் என்ற அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற எல்லாப் பள்ளிகளையும் ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.